**ஐ.டி.எண்.91/2024** **12.01.2026**

**தொ.த.சாட்சி 1 இமாயூன் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் நிர்வாகம் தாக்கல் செய்த பதிலுரையில் என்ன கூறப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும். என்னுடைய மனு மற்றும் வாக்குமூலத்தில் நான் என்ன படித்துள்ளேன் இதற்கு முன்பு எந்த இடங்களில் வேலை பார்த்தேன் என்பது குறித்து எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். இந்த நிறுவனத்தில் Precision Making Tools ஆகியவற்றை உற்பத்தி செய்கிறார்கள் என்றால் சரிதான். இதற்காக CNC Machine-ஐ உபயோக்கிறார்கள் என்றால் சரிதான். இந்த நிறுவனத்தில் பணியாற்றும் நிரந்தர பணியாளர்களுக்கு பணிநியமன ஆணை வழங்குவார்கள் என்றால் குறிப்பிட்ட பணியாளர்களுக்கு தான் வழங்குகிறார்கள். எனக்கு பணிநியமன உத்தரவு எதுவும் தரப்படவில்லை. தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு நான் தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில் அங்கு நடைபெற்ற பேச்சுவார்த்தையில் நான் பங்கு கொண்டேன். நிர்வாகம் தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு பதில் அளித்தார்கள். நிர்வாகம் தாக்கல் செய்த பதிலுரையில் எனக்கு நிர்வாகம் வேலை மறுக்கவில்லை என்று கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் நான் பணிநிரந்தரம் கேட்டேன் என்றால் சரிதான். நான் பணிநிரந்தரம் செய்யவேண்டும் என்று கோரியதால் தொழிலாளர் உதவி ஆணையர் நான் வேறு ஒரு அலுவலரை அனுகவேண்டும் என்று நான் அளித்த மனுவின் மேல் நடவடிக்கை கைவிடப்பட்டது என்று கூறி அறிக்கை அளித்தார் என்றால் சரிதான் அந்த அறிக்கை **நி.த.சா.ஆ.1.** இந்த அறிக்கையை தொடர்ந்து நான் பணிநிரந்தரம் கோரி எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நிர்வாக தரப்பு சான்றாவணம் 1-ஐ தொடர்ந்து தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு தான் நான் தொடர்ந்து வழக்கை நடத்தினேன் என்றால் சரிதான். தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு நடைபெற்ற சமரச பேச்சுவார்த்தையின் பொழுது 12(3) ஒப்பந்தம் கையொப்பமிட்டு கொடுத்தால் பணிபுரிய தயாராக இருப்பதாக நான் கூறினேன் என்றால் சரிதான். அதற்கு நிர்வாகம் அந்த காரணங்களை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும் நான் ஏற்கனவே பணிபுரிந்த நிலையிலேயே நான் பணி புரிய நிர்வாகத்திற்கு ஆட்சேபணையில்லை என்று அளித்த பதில் தற்பொழுது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அது

**நி.த.சா.ஆ2.** நான் பணிபுரிந்த நிலையிலேயே நான் மறுபடியும் பணியில் சேர்வதற்கு எனக்கு உடன்பாடு இல்லை என்றால் சரிதான். ஏனென்றால் நிர்வாகம் என்னை நிரந்தர பணியாளராக ஆக்குவதற்கு எந்த உறுதியும் தரவில்லை அதனால் எனக்கு உடன்பாடு இல்லை. இந்த வழக்கையும் பணிநிரந்தரம் கோரிதான் தாக்கல் செய்துள்ளேன என்றால சரிதான். தற்போது என்னிடம காட்டப்படும் புகைப்படத்தில் இருக்கும் நபர் நான் தான். அந்த புகைப்படும் **நி.த.சா.ஆ.3**. என் தகப்பனார Street Food கடை நடத்தி வருகிறார் என்றால் சரிதான். அந்த புகைப்படத்தில் நான் இருப்பதால் நான் தான் இந்த கடையை நடத்தி வருகிறேன் என்றால சரியல்ல. அக்டோபர மாதம 2024-ம வருடம இந்த கடை ஆரம்பிக்கப்பட்டது. அந்த கடை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பு என் அப்பா பழக்கடை நடத்தி வந்தார். எனக்கு தொழில்நுட்ப தகுதி எதுவும் இல்லாத காரணத்தினால் நான் நிரந்தர பணி கோரி இந்த வழக்கை தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. நான் தற்காலிக பணியாளராக தான் பணிபுரிந்தேன் என்றும் வழக்கிற்காக வருடத்தில் 300 நாட்களுக்கு மேலாக பணிபுரிந்ததாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பணிநிரந்தரம் கோருவதற்காக பணிமறுக்கப்பட்டது என்று கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு ஒப்பந்தம் போட்டால் தான் பணிக்கு செல்வேன் என்று நான் கன்டீசன் போட்டேன் என்றால் சரியல்ல. பணிநிரந்தரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2026.01.19 14:26:20 +0530